**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.3/2021**

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr–III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 17.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கோச்மேன் (DW–1) | வயது | : | 46/2025 |
| த/க. பெயர் | : | திரு. மாரிமுத்து | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ஆலங்கோட்டை | வட்டம் | | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) நான் எங்கு தங்கியுள்ளேன் என்றால் ஆலங்கோட்டையில் தங்கியுள்ளேன். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் ஆலங்கோட்டையில் உள்ளது. எங்கள் ஊரில் அம்சவள்ளி பாட்டி தெரியுமா என்றால் தெரியும் தற்போது இறந்துவிட்டார். அம்சவள்ளி பாட்டியின் மகன்கள் வாதிகள் என்றால் சரிதான். அம்சவள்ளி பாட்டி வீட்டின் கீழ்புறம் சம்பந்தம் என்பவர் வீடு உள்ளது என்றால் சரிதான். தற்போது சம்பந்தம் இறந்தபின்னர் அவரது மனைவி , மகள்கள் அந்த வீட்டில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். சம்பந்தம் மனவைி மகள்கள் மீது வாதிகள் இந்நீதிமன்றத்தில் OS.No.95/2020 வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.
2) தாவா சொத்தில் பாதை இருப்பதாக பல ஆண்டுகளாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். அம்சவள்ளி பாட்டியின் மீது பாதை உள்ளதை தடை செய்யக்கூடாது என்று சம்பந்தம் இந்நீதிமன்றத்தில் OS.No.54/2014 வழக்கு தாக்கல் செய்து விசாரணையின்போது நான் சம்பந்தம் வழக்கிற்கு 2வது சாட்சியாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. சமபந்தம் எனது ஊரை சேர்ந்தவர் அவருக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும்இல்லை என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் OS.No.54/2014 வழக்கு பாதை இல்லை என சொல்லி தள்ளுபடி செய்யப்பட்டதும் மேலும் அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.
3) தாவா சொத்தை பாலையன் என்பவரிடமிருந்து 15.12.2020 இல் நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்திலன் பாலையனுக்கு பாத்தியப்பட்டது

என்பதற்கான மூல ஆவணத்தை பார்த்தேனே என்றால் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை பார்த்தேன். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றிய விபரம் நான் பெற்ற கிரய ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) அந்த செட்டில்மெண்ட் ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் பாலையனின் அப்பா உத்திராபதி எழுதி கொடுத்தார். அந்த ஆவணம் எப்போது ஏற்பட்டது என்றால் தெரியாது. நான் சொல்வது போல் பாலையன் பெயரில் எந்த வித செட்டில்மெண்ட் ஆவணமோ, பாகப்பிரிவின ஆவணமோ எதுவும் இல்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தின் சர்வே எண்ணும் ஏற்கனவே சம்பந்தம் பாதை இருப்பதாக தாக்கல் செய்த வழக்கு சொத்தும் ஒன்றுதான் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற ஆவணத்தில் நடைபாதை இருப்பதாக எழுதப்பட்டிருப்பதால் எந்த பத்திரத்தின் அடிப்படையில் நடைபாதை இருப்பதாக எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாலையனின் அம்மா ஊர் கண்டிதம்பேட்டை என்றால் சரிதான். பாலையனின் மாமனார் ஊர் கண்டிதம்பேட்டை என்றால் சரிதான், பாலையன் திருமணத்திற்கு பின்பு சில காலம் கழித்து கண்டிதம்பேட்டை சென்றுவிட்டார்.

6) தாவா சொத்திற்கு அருகில் பாலையனுக்கு சொந்தமான குடியிருப்பு வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பாலையனிடமிருந்து காலி மனையாக தான் வா.சா.ஆ.5 ஆவணப்படி கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்து ஏற்கனவே அம்சவள்ளிக்கு சொந்தமான வீடு இருந்து வந்தது தற்போது அவரது வாரிசுதாரர் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான்.

7) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் உள்ள பாலையனின் கையெழுத்து ஒன்றாகதான் உள்ளது என்றால் சரிதான். பாலையன் என்பவர் 13.11.2000 தேதியன்று ராமசந்திரன் என்பவற்கு தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களையும் அவருக்குரிய பாக வீதத்தை விடுதலை பத்திரமாக எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 13.11.2000 தேதிக்கு பின்னர் வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள சொத்துக்களில் பாலையனுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

8) பாலையனுக்கு உரிமையில்லாத சொத்தினை நான் கிரயம் பெற்றது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சம்பந்தம் எனக்கு என்ன

உறவுமுறை என்றால் மாமா. ஏற்கனவே தாவா சொத்து குறித்து வழக்கு நடைபெற்ற விபரம் தெரிந்திருந்தும் பாலையன் 2வது வாதிக்கு விடுதலை எழுதி கொடுத்த விபரம் தெரிந்திருந்தும் நான் தாவா சொத்தை குறித்து வாதிக்கு எதிரான பெயரளவிலான ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.5 ஆவணத்தை ஏற்படுத்தி தாவா சொத்தை கிரயம் பெற்று அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேலே கண்ட விபரங்கள் தெரிந்து கிரயம் பெற்றதால் நான் அப்பாவி கிரயதாரர் (Innocent Purchaser) இல்லை என்றால் சரியல்ல.

9) தாவா சொத்து தொடர்பாக பாலையனுக்கு பணம் கொடுத்ததாக வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் பணத்தை எங்கு கொடுத்தேன் என்றால் உள்ளிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ரொக்கமாக கொடுத்தேன். சார்பதிவாளர் முன்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் பணம் கொடுத்தாக வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் நான் பாலையனுக்கு மறுபயனான தொகை எதுவும் கொடுக்காமல் பெயரளவு கிரய பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

10) கிரய தொகையானது கிரய தேதிக்கு முன்பே கொடுக்கப்பட்டதாக கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, கிரயம் ஏற்பட்டபோது தான் பணம் கொடுத்தேன். தாவா சொத்தில் பாதை இருப்பதாக காண்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் வா.சா.ஆ.5 என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் கிரயம் பெற்ற சொத்தை நான் அனுபவம் செய்து வருகிறேனா என்றால் 1 வருடம் கழித்து பாலையனிடம் திரும்ப விற்பனை செய்து விட்டேன். வழக்கு தாக்கல் செய்த தேதியில் தாவா சொத்து எனது உரிமையில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணமானது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 17:07:50 +0530

District Munsif
Mannargudi.